மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண். 06/2025
இன்
அசல் வழக்கு எண்.67/2015
-------

விஜயலட்சுமி .. மனுதாரர்/5 ம் பிரதிவாதி

/எதிர் /

1. முத்துக்கிருஷ்ணம நாயக்கர் (இறப்பு)
2. சங்கரசுப்புராஜ்
3.பாலகிருஷ்ணன்
4. நாராயணன்
5. ராமசாமி
6. நா. அய்யப்பன்
7. ரா. அய்யப்பன் ..4 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 4 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 12.11.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. என். லட்சுமிகாந்தன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் இறந்து விட்ட நிலையிலும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.கே. பலராம், அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.வி. ரவீந்திரன், அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளதாலும், 6, 7 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவை ஏற்று வழக்கு சொத்தையும், அதன் அருகிலுள்ள மனுதாரர்

சொத்தையும் அளந்து அதன் தன்மை மற்றும் அமைப்பு குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 26 விதி 9 பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** இந்த மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் 4, 5 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்தபோது 6, 7 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள். அதன்பின்னர் மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டி இ.ம.எண்.03/2023 தாக்கல் செய்து மேற்படி மனுவானது 04.11.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டு மனுதாரரை வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது. மனுதாரரை அசல் வழக்குரையில் 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் வழக்கு சொத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. எந்த கட்டிடம் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது என்று 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் கூறுகிறார்களோ அந்த சொத்து மனுதாரரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டு மனுதாரரை தரப்பினராக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையர் மனுதாரருக்கு எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் வழக்குரை சொத்துக்களை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் மனுதாரருக்கு தற்போது தெரிய வந்துள்ளது.

2.2. வழக்கு தரப்பினரான மனுதாரருக்கு எவ்வித அறிவிப்பும் கொடுக்காமல் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை முழுமையாக அளக்காமல் அறிக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி அறிக்கை ஒருதலைபட்சமானதாகும். எனவே மேற்படி அறிக்கை இல்லா நிலையது.

மனுதாரரை கட்டுப்படுத்தக்கூடியதில்லை. எனவே முறையாக அனைவருக்கும் அறிவிப்பு கொடுத்து அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே புதிதாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து வழக்கு சொத்து மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள மனுதாரரது சொத்தையும் அளந்து அதன் தன்மை மற்றும் அமைப்பு குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணையும் இருக்கப் போவதில்லை. இம்மனுவை அனுமதிக்காது போனால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் எனவே மனு தாக்கல்.

3. **<u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் –</u>**

**3.1.** இந்த எதிர்மனுதாரர் மனுவில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதி ஆவார். மனுதாரர், 6ம் எதிர்மனுதாரரின் தங்கையாவார். பிராது சொத்தில் தெற்குப் பகுதியில் 6ம் எதிர்மனுதாரர் நிலம் உள்ளது. அவர் பிராதில் கண்ட மனுதாரருடைய நிலத்தை ஆக்கிரமித்து கட்டிடம் செப்டிக் டேங்க் கட்டியுள்ளதை நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட்டு அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில், 6ம் எதிர்மனுதாரர் மனுதாரர்5ம் பிரதிவாதிக்கு 23.07.2021ம் தேதியில் மனுதாரருடைய நிலத்தை தானசெட்டில்மெண்ட் பதிவு செய்து கொடுத்துள்ளது இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது நடந்துள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவா நிலத்தை பார்வையிடும் போது இந்த மனுதாரர்/5ம் பிரதிவாதி பிராதில் தரப்பினராக சேர்க்கப் படவில்லை என்பதால் நோட்டீஸ் வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையர் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

3.2. ஆதியில் வழக்கு தாக்கல் செய்யும்போது வாதி நிலத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியவர்களாக இந்த மனு 4, 5 எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. பின்பு 4, 5 எதிர்மனுதாரர்கள் நிலத்தை 6, 7

எதிர்மனுதாரர்களுக்கு விற்று விட்டதனால் அவர்கள் பிராதில் தரப்பினராக சேர்க்கப்பட்டு அவர்கள் அனைவருக்கும் வழக்கறிஞருக்கு நிலம் பார்வையிட அறிவிப்பு வழங்கப்பட்டு நிலம் அவர்கள் முன்னிலையில் அளக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்த மனு 4 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிவிப்பு நோட்டீஸ் வழங்கியதே இந்த மனுதாரரையும் கட்டுப்படுத்தும். இந்த நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை இந்த மனுதாரரையும் கட்டுப்படுத்தும்.

3.3. மேலும் நீதிமன்ற ஆணையர் தாவா நிலத்தை பார்வையிட்ட போது இந்த மனுதாரர் ஸ்தலத்தில் இருந்துள்ளார். ஆகவே பிராது நிலத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், மீண்டும் நிலத்தை பார்வையிட வேண்டுமென்பது வழக்கை மேல் நடத்தவிடாமல் தடுக்கும் முயற்சியாகும். எனவே இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப் படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 5ம் பிரதிவாதி. மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு சொல்லும் காரணம் என்னவென்றால், வழக்கு தரப்பினராக மனுதாரருக்கு எவ்வித அறிவிப்பும் கொடுக்காமல் அவருக்குப் பாத்தியப்பட்ட சொத்தை முழுமையாக அளக்காமல் அறிக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே முறையாக அனைவருக்கும் அறிவிப்பு கொடுத்து அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே புதிதாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து வழக்கு சொத்து

மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள மனுதாரரது சொத்தையும் அளந்து அதன் தன்மை மற்றும் அமைப்பு குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், நீதிமன்ற ஆணையர் தாவா நிலத்தை பார்வையிடும் போது இந்த மனுதாரர்/5ம் பிரதிவாதி பிராதில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்பதால் நோட்டீஸ் வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையர் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும், நீதிமன்ற ஆணையர் தாவா நிலத்தை பார்வையிட்ட போது இந்த மனுதாரர் ஸ்தலத்தில் இருந்துள்ளார். ஏற்கனவே பிராது நிலத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், மீண்டும் நிலத்தை பார்வையிட வேண்டுமென்பது வழக்கை மேல்நடத்த விடாமல் தடுக்கும் முயற்சியில் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறும் வேண்டப்பட்டுள்ளது.

6.3. வழக்கின் ஆவணங்கள் மற்றும் வாதுரைகளை பரிசீலனை செய்ததில் மனுதாரர் கோரியுள்ள நிவாரணமானது ஏற்புடையதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில் மனுதாரர் முதலில் ஏற்கனவே வழங்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நிராகரிக்க கோரி நிவாரணம் கேட்டிருக்க வேண்டும். அவ்வாறு ஏற்கனவே வழங்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நிராகரிக்காமல் புதியதோர் நீதிமன்ற ஆணையரை அளவீடு செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்க இயலாது. மேலும் இம்மனுவில் மனுதாரர்கள் வழக்கு சொத்தை அளவீடு செய்வதற்காக கோரியுள்ள காரணங்கள் ஏற்புடையதாக இல்லை என்றும், வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்தும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட காரணங்களினால் இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10—ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்
இ.ம.எண்.06/2025
இன்
அ.வ.எண்.67/2015
உத்தரவு
நாள் — 10.12.2025.